Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 202 /2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –6

| Name: | ராமமூர்த்தி | Calling: | உதவி ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's Name: | காசிநாதன் | Religion: | |
| Village: | அனகாநல்லூர்போட்டூர் | Age: | 57 |
| Taluk: | குடியாத்தம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 25.03.2026 நேரம் : 04.00 PM

( 1,3 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி இறந்துவிட்டார், அவருக்கு எதிரான வழக்கு அற்றுபோய்விட்டது.)

அ.சா.6 முதன்மை விசாரணை.

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஹரிபிரியா மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜமாணிக்கம் என்பருக்காகவும் சேர்த்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவும் அவர்கள் தாயரித்த ஆவணங்களை இந்த சாட்சியம் மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரிகளின் தரப்பு வழக்கிறஞர் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

கடந்த 21.12.2016 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜமாணிக்கம் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் வந்த இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த தங்கராஜ் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார். **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 473/2016 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324,506(2) IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பினார்.

பின்னர் வழக்கு கோப்பை அவரே புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 21.12.2016 ம் தேதி சம்பவயிடம் சென்று 13.30 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் செல்வராஜ், ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 7 மற்றும் அ.த.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் அதே நாளில் அதே சாட்சிகள் முன்னிலையில் இவ்வழக்கில் எதிரி பயன்படுத்திய சுமார் 2 அடி நீளமுள்ள இரும்பு பைப், இரண்டு பிளேடு ஆகிவற்றை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த இரும்பு பைப், இரண்டு பிளேடு ஆகியவை முறையே சா.பொ 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டார். **அந்த படிவம் 91 அ.த.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் தங்கராஜ், முரளி, பிரபு மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் 21.12.2016 ம் தேதி கொத்தகோட்டை பஸ்ஸ்டாப் இடம் பகல் 15.15 மணிக்கு எதிரிகளை முறைப்படி கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களான தங்கராஜ் மற்றும் முரளி ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. ஹரிபிரியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றிதழ்கள் பெற்றார். **தங்கராஜ் மற்றும் முரளி ஆகியோரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் முறையே அ.த.சா.ஆ 11 , 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது 294(பி), 323, 324,506(2) IPC இறுதி

அறிக்கை தாக்கல் செய்தார். அவரது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்துகளை காவல்நிலையத்தில் வைத்து இந்த எதிரிகளுக்கு எதிராக தயார் செய்து ஒரு பொய்யான முதல் தகவல் அறிக்கையை பதிந்து தவறான இறுதிஅறிக்கையை இந்த எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரும் காயம்பட்ட முரளியும் இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது தவறு.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராமமூர்த்தி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K